



Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 01, இதழ் : 250 பிலவ வருடம், வைகாசி மாதம் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (08.06.2021) ஹிஜ்ரி - 1442, ஷவ்வால் பிறை - 26, 0115886187 - பக்கங்கள் 06

'தமிழன்' மின்னிதழ் பதிப்பு e-Paper

தமிழன் குறுஞ்செய்திகளை உடனுக்குடன் பெற...
பதிவு செய்வதற்கு
Dialog பாவனையாளர்களுக்கு
Thamilan என்று Type செய்து 7172 என்ற இலக்கத்துக்கு SMS செய்க
SLTMOBITEL பாவனையாளர்களுக்கு
REG(இடைவெளி)Thamilan என்று Type செய்து 77111 என்ற இலக்கத்துக்கு SMS செய்க
மாதமொன்றுக்கு ரூ.30 + வரி அடங்கலாக
தமிழன்



## பாடசாலைகள் எப்போது ஆரம்பம்?

### இறுதித் தீர்மானமில்லை என்கிறார் ஜீ.எல்.

•யோ.தர்மராஜ்

கொரோனா தொற்றுப் பரவலுக்கு மத்தியில் மூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீள ஆரம்பிக்கும் திகதி குறித்து இதுவரை எவ்வித இறுதித் தீர்மானமும் எடுக்கப்படவில்லை - என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா தொற்றுப் பரவலுக்கு மத்தியில் மூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்காக உரிய திகதி குறித்து இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. இதனால், பாடசாலைகள் மீள ஆரம்பமாகும் திகதி குறித்து தற்போது கூற முடியாது. எனினும், பாடசாலைகளை விரைவில் ஆரம் பிப்பதற்கே நாங்கள் முயற்சிக்கின்றோம். மாணவர்கள் பெரிதும் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளதால் முடிந்தவரை பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கே அரசாங்கம் முயற்சிக்கின்றது. ஆனால், கொரோனா தொற்றுக்கு மத்தியில் மாணவர்களை பாதிப்புக்குள்ளாக்குவதற்கு அரசாங்கம் தயாரில்லை.

நாட்டின் கொரோனா தொற்று நிலைமை தொடர்பில் நாளுக்கு நாள், வாரத்திற்கு வாரம் ஆராய்ந்து வருகின்றோம். இந்நிலையில், மாணவர்களின் பாதுகாப்புகளை உறுதிப்படுத்திக்கொண்டு, சாதாரண தர மாணவர்களுக்கான வகுப்புகளை விரைவில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

# ஒட்சிசன் தேவை



## அதீத தொற்றுப்பரவல்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

•யோ.தர்மராஜ்


நாளுக்கு நாள் அதிகரித்துவரும் கொரோனா நோயாளர்களினால் தென்கிழக்காசியாவில் கொரோனா நோயாளர்களுக்கான ஒட்சிசன் தேவைப்படுகின்ற அளவில் இலங்கை 441 வீதத்தால் அதிகரித்து மூன்றாவது இடத்திலுள்ளது. அதன்படி, இந்தியாவை விட ஒட்சிசன் தேவையின் அளவில் இலங்கை முன்னிலையிலுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

அத்தோடு, நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் பாதிப்புக்குள்ளாகுவோரும் அதிகரிக்கின்றனர். 02

## மட்டக்களப்பில் 37 பேர் கொரோனாவுக்கு பலி

•கனகராசா சரவணன்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் 23 பேருக்கு ஒட்சிசன் செலுத்தப்பட்டு வருவதுடன், 3ஆவது கொரோனா அலையில் 37 பேர் உயிரிழந்துள்ளதுடன் 2 ஆயிரத்து 200 பேர் கொரோனா நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலும், 983 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கினால் மாத்திரம் தான் கொரோனா... 02



## கொரோனாவினால் கல்முனையில் மூவர் உயிரிழப்பு

•பாறுக் ஷிஹான்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவைச் சேர்ந்த மூவர் நேற்று மதியம் வரையிலான 24 மணிநேரத்தில் உயிரிழந்துள்ளதாகவும் 16 பேர் தொற்றுக்குள்ளானதாக அடையாளங்காணப்பட்டுள்ளதாகவும் பிராந்திய சுகாதார பணிப்பாளர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட ஆலையடிவேம்பைச் சேர்ந்த 70 வயதுடைய பெண் ஒருவர் ஹோமாகம வைத்தியசாலையிலும் அம்பாறை வைத்தியசாலையில் சம்மாந்துறையைச் சேர்ந்த நபர் ஒருவரும் கல்முனைக்குடி அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் மருதமுனையைச் சேர்ந்த நபர் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர் .

எனவே, வீரியமடைந்து வருகின்ற கொரோனா அனர்த்தத்திற்கு முகங்கொடுப்பதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்புகளை வழங்க முன்வர வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## யாழ். முஹம்மதியா பள்ளி நிர்வாகம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள முஹம்மதியா ஜும் ஆப் பள்ளிவாசலின் தலைவர் உட்பட அனைத்து நிர்வாகிகளையும், பொறுப்புதாரிகளையும் உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் இடைநிறுத்தம் செய்து விசேட நிர்வாகக் குழுவொன்றை நியமனம் செய்வதற்கு இலங்கை வக்பு சபை தீர்மானித்துள்ளது.

இப்பள்ளிவாசலில் கடந்த 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொவிட் - 19 பயணக் கட்டுப்பாடுகளை மீறி தலைவர் உட்பட 14 நபர்கள் பள்ளிவாசலில் ஒன்றுகூடி இருந்தமையின் காரணமாக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறையினரால் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இப்பள்ளிவாசலின் தலைவர் உட்பட நிர்வாகிகள் தொடர்ந்தும் அரசாங்கத்தின் சட்டங்களை மீறி நடந்துள்ளனர் என்பதனாலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 02



இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பொன்று அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்றது.

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் பாதிப்பு: இழப்பீடுகளைப் பெற நடவடிக்கை

### சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானமென நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



•நா. தினுஷா

எம்.வி.எகஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பில் சட்டநடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதாகவும் இதனால்... 02

## குறுகிய நேரத்துக்கு மாத்திரம் நாடாளுமன்ற சபை அமர்வுகள்

### நாட்டின் தற்போதைய நிலை தொடர்பில் இன்று விவாதமும் இடம்பெறும்

•யோ.தர்மராஜ்

கொரோனா தொற்று காரணமாக இவ்வார நாடாளுமன்ற அமர்வை இன்று மாத்திரம் நடத்துவதற்கு நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்க தெரிவித்தார்.

கொரோனா தொற்று காரணமாக இவ்வார நாடாளுமன்ற அமர்வை நடத்துவது குறித்து சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன... 02

## ஒட்டமாவடி சிறுவன் திடீரென உயிரிழப்பு

•எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி, மஜ்மா நகர் பகுதியில் சிறுவன் ஒருவன் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

திடீரென சோர்வடைந்த நிலையில் நேற்றுக் காலை 6 மணியளவில் குறித்த சிறுவன் உயிரிழந்துள்ளான்.

முகம்மது இஸ்மாயில் முகம்மது பிர்னாஸ் என்ற 14 வயதுடைய சிறுவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளான். 02

## சதியை தோற்கடிக்க எதிர்க்கட்சியினர் உறுதி

### போலியான பிரசாரங்களுக்கெதிராக நேற்று சிறப்புத் தீர்மானம்

•நா. தினுஷா

ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிரான போலி பிரசாரங்களுக்கு எதிராகவும் அவ்வாறான சதியை தோற்கடிப்பதற்காகவும் அக்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நேற்று சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 02

## தேர்தல் மறுசீரமைப்பு முன்மொழிவு காலம் 19ஆம் திகதியுடன் நிறைவு

•நா. தினுஷா

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமைகளில் மேற்கொள்ளப்படவேண்டிய சீர்திருத்தங்கள் குறித்த யோசனைகள், முன்மொழிவுகளை எதிர்வரும் ஜூன் 19ஆம் திகதிக்கு முன்னர் எழுத்துமூலம் அனுப்பிவைக்குமாறு நாடாளுமன்ற விசேட குழு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இதற்கமைய குறித்த குழுவில் யோசனைகளை முன்வைப்பதற்கு எதிர்பார்க்கும் பொதுமக்கள் மற்றும் ஏனைய ஆர்வமுள்ள அமைப்புகள் தமது முன்மொழிவுகளை தபால் மூலம் அல்லது sec.pscelectionreforms2021@parliament.lk என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாக அனுப்பிவைக்க முடியும் என இந்த விசேட நாடாளுமன்றக் குழுவின் செயலாளரும் நாடாளுமன்ற... 02



புதிய களனி பாலம் முதல் அத்துருகிரிய வரையான 16.4 கிலோமீற்றர் நீளமான அதிவேக நெடுஞ்சாலை மற்றும் கெடம்பே, கொஹுவல, கொம்பனித்தெருவில் ஜஸ்ரிஸ் அக்பார் மாவத்தை மற்றும் உத்தரானந்த மாவத்தை, பாலதக்ஷ மாவத்தை மற்றும் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்படும் 06 மேம்பாலங்களின் பணிகளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று அலரிரி மாளிகையில் ஆரம்பித்துவைத்தார். இந்நிகழ்வில் நெடுந்தெருக்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட அமைச்சர்கள், முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பு கரடியனாறு பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்த - மரங்களை வெட்டிய 06 பேர் கைது





*ஏறாவூர் நிருபர் - நாஸர்*

மட்டக்களப்பு - கரடியனாறு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வாவிகளில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த மற்றும் மரங்களை வெட்டிய 06 பேர் கரடியனாறு பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் சட்டவிரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திய மூன்று ரிப்பர் வாகனங்கள், இரண்டு உழவு இயந்திரங்கள் மற்றும் ஜேசீபி இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களான இந்த வாகனங்களின் சாரதிகள் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டதையடுத்து பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸார் கூறினர்.

இவர்களில் சிலர் அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்ந்துள்ளனர். மேலும் சிலர் அனுமதிப்பத்திர விதிமுறைகளுக்கு முரணாக மணல் அகழ்ந்ததாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்டவிரோத மணல் அகழ்விற்காக காட்டுவழியாக வாகனங்களை கொண்டுசெல்லும் நோக்குடன் பனைமரங்களை வெட்டி அழித்து, குறுக்குப்பாதை அமைப்பிற்குப் பயன்படுத்தப்பட்ட ஜேசீபி இயந்திரம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமரகோன் தெரிவித்தார்.



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் கறுப்புப் பெட்டி உள்ளிட்ட பொருட்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு புதுக் கடை நீதவான் நீதிமன்றில் நேற்று கையளித் தனர்.

(படப்பிடிப்பு: லலித் பெரேரா)



நாடுமுழுவதும் பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நிலையில் கொழும்புக்கு வருகைதரும் வாகனங்களை வகைபிரித்து ஸ்ரிக்கர் ஒட்டும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகின. கொழும்பு, நுகேகொடை பகுதியில் பொலிஸார் வாகனங்களுக்கு ஸ்ரிக்கர் ஒட்டுவதை படங்களில் காணலாம்.

(படப்பிடிப்பு:- ஏஷான் தசநாயக்க)

# தடையின்றி சேவைகளை வழங்குமாறு தனியார் வங்கிகளுக்கு மத்திய வங்கி அறிவுறுத்து

நாட்டிலுள்ள முக்கிய வணிக வங்கிகள் சில நேற்று முதல் ஒரு வார காலத்திற்கு சாதாரண வங்கி சேவையை இடைநிறுத்த உள்ளதாக அறிவித்திருந்த நிலையில், பொதுமக்களுக்கு இடையூறுகளின்றி சேவையை வழங்குமாறு இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

விசேட சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டு மத்திய வங்கி இதனைத் தெரிவித்துள்ளது.

குறித்த சுற்றறிக்கையில் பொலிஸ்மா அதிபர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக எதிர்வரும் நாட்களில் தனிமைப்படுத்தல் சட்டத்திற்கும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றியும் குறைந்தளவான வாடிக்கையாளர்களை வங்கிக்குள் அனுமதித்து' பொதுமக்களுக்கு இடையூறின்றி சேவையை முன்னெடுக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கொமர்ஷல், சம்பத், செலான், DFCC, நேஷன் டிரஸ்ட், அமானா மற்றும் யூனியன் வங்கிகளில் இவ்வாறு சாதாரண வங்கி சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இன்று மற்றும் நாளை ஹட்டன் நெஷனல் வங்கியின் கிளைகள் மூடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை - இறக்கண்டி பகுதியில் அவசரமாக தரையிறக்கப்பட்ட விமானம்



(எப்.முபாரக்)

இலங்கை விமானப்படையின் செஸ்னா-150 ரக விமானமொன்று திருகோண மலை, நிலாவெளி இறக்கண்டி பிரதேசத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த விமானம் தரையிறக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் அதில் பயணித்த இரு விமானிக ளுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை என்றும் விமானப்படை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

விமானிகளுக்கான அடிப்படை பயிற் சிக்காக இந்த வகை விமானங்கள் பயன்படுத் தப்படுகின்றன.

சீனக்குடா விமானப்படைத் தளத்தி லிருந்து நேற்றுக் காலை 10.22 மணிக்கு புறப்பட்ட இவ்விமானம், 10.48 மணிய ளவில் தரையிறக்கப்பட்டதாகவும் விமா னிகளின் சாதூரியத்தினால் பாரிய விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக் கப்படுகின்றது.

இதேவேளை, இவ்விடயம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு விமானப்படை தலைமையகம் அறிவித்துள்ளது.

## எக்ஸ்பிரஸ் பேர்ள்...

நாட்டுக்கு ஏற்பட்டுள்ள இழப்பை சரிசெய்து கொள்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் இழப்பீடுகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டதரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்துக்குள்ளாகியதால் நாட்டுக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் மற்றும் பாதிப்பு தொடர்பில் இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று நேற்று நீதி அமைச்சில் இடம்பெற்றிருந்தது. இந்தச் சந்திப்பின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நீதி அமைச்சர் அலி சப்ரி மேலும் தெரிவிக்கையில்,

இந்தக் கப்பலில் ஏற்பட்ட தீப்பரவலினால் எமது பொருளாதாரம், சுற்றாடல் கட்டமைப்பு, கடல்சார் தொழில் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு துறையினருக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்பை பூரணபடுத்திக்கொள்வதற்காக சட்ட நடவடிக்கைகள் சட்டமா அதிபர் திணைக் களத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளன. அந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழப்பை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் போது சுற்றுச்சூழலுக்கும், கடற்றொழில் துறைக்கும், நாட்டின் பொருளாதாரத்துக்கும் இந்த கப்பல் விபத்தினால் இதுவரையில் ஏற்பட்டுள்ள மற்றும் இந்த நிலைமையை சரிசெய்வதற்கு எதிர்காலத்தில் ஒதுக்கவேண்டியுள்ள செலவுகளைப் பூர்த்திசெய்யும் நோக்கில் சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ள தீர்மானித்துள்ளோம்.

அந்த நடவடிக்கைகள் தொடர்பில் சட்ட மா அதிபருக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும். இதற்கு துறைசார் நிபுணர்களின் உதவிகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் முழு இழப்பீட்டுத் தொகையை சட்ட ரீதியாகப் பெற்றுக்கொள்ளவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன, கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜயசேகர உள்ளிட்ட அமைச்சுகளின் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## ஒட்சிசன் தேவை...

இதனால், இனிவரும் காலங்களில் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரிப்பதற்கான சாத்தயக்கூறுகள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையும் மரணங்களும் அசாதாரண முறையில் அதிகரித்துவருகின்றன. கடந்த நாட்களில் ஒரேநாளில் 48 மரணங்கள் பதிவாகியுள்ளன. இந்நிலையில், பயணக்கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டு கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை, மரணங்களை குறைப்பதற்கு எதிர்பார்க் கப்படுகின்றது.

எனினும், பயணக்கட்டுப்பாடு அமுலில் இருந்தபோதிலும் மக்களின் ஒத்துழைப்புகள் முறையாக கிடைக்கவில்லை. குறிப்பாக, நகர்ப் புறங்களில் வாகனங்களின் போக்குவரத்து 40-50 வீதமாக காணப்படுகின்றதுன. அதேபோன்று, மக்களின் நடமாட்டமும் அதிகரித்துள்ளது. பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் மக்களின் ஒத்துழைப்பு முறையாக கிடைக்காதமையினால் எதிர்வரும் காலங்களிலும் பயணக்கட்டுப்பாட்டை நீடிப்பதா அல்லது தளர்த்துவதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

பயணக்கட்டுப்பாடுகளுக்கு பொதுமக்கள் முறையாக ஒத்துழைக்கும் பட்சத்திலேயே கொரோனா தொற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். இல்லையேல், நாங்கள் எதிர்பார்த்த வகையில் கொரோனா தொற்றை கட்டுப்படுத்த முடியாது.

இதேவேளை, நாளுக்கு நாள் அதிகரிக்கும் கொரோனா நோயாளர்களினால் பாதிப்புக்குள்ளாகுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. ஒட்சிசன் தேவைப்பாடும், அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தவண்ணமேயுள்ளது.

தென்கிழக்காசியாவில் கொரோனா நோயாளர்களுக்கான ஒட்சிசன் தேவைப்படுகின்ற அளவில் இலங்கை மூன்றாவது இடத்திலுள்ளது.

நேபாளம் 795 வீதத்தால் முதலிடத்திலும் வியட்நாம் 457 வீதத்தால் இரண்டாம் இடத்திலும் இலங்கை 441 வீதத்தால் மூன்றாவது இடத்திலும் இருக்கின்றன. இதேவேளை, இந்தியா 118 வீதத்தால் நான்காவது இடத்திலுள்ளது. இந்தியாவில் ஒட்சிசன் தேவை அதிகரித்திருந்தாலும் சனத்தொகையின் அடிப்படையில் அந்த இடத்தில் இருக்கிறது. எமது நாட்டில் சனத்தொகை குறைவாகும். அதேபோன்று மிக விரைவாக தொற்றுப்பரவலும் ஏற்படும். அதன்படி, தென்கிழக்காசிய நாடுகளில் இலங்கையில் ஒட்சிசன் தேவைப்பாடுகளின் அளவு 441 வீதத்தால் அதிகரித்துள்ளது.

நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் அதனால் பாதிப்புக்குள்ளாகுவோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது. இதனால், இனிவரும் காலங்களில் மரணங்களின் எண்ணிக்கையும் அதகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. நாளுக்கு நாள் இந்தத் தொற்றின் தீவிரம் அதிகரித்துவருவதால் பொதுமக்கள் உரிய சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்கும் பட்சத்திலேயே கொரோனா தொற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் - என்றார்.

## சதியை தோற்கடிக்க...

ஐக்கிய மக்கள் சக்திக்குள்ளும் ஆதரவு வழங்கும் கட்சிகளுக்குமிடையிலும் முரண்பாடுகள் மற்றும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாக சமூக ஊடக வலையமைப்புகளில் வெளியிடப்பட்ட அடிப்படையற்ற போலியான செய்திகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தனது கவனத்தை ஈர்த்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இத்தகைய போலியான ஊடக பிரசாரத்தை கடுமையாக கண்டனம் செய்ததோடு, ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்கால வெற்றிகளுக்காக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச மீது முழு நம்பிக்கையையும் தெரிவித்து நேற்று பிரேரணை ஒன்றை ஏகமனதாக நிறைவேற்றினர்.

மக்களால் நிராகரிக்கப்படும் அரசாங்கத்தையும், நிராகரிக்கப்படும் அரசாங்கத்தை பாதுகாக்க முயற்சிக்கும் டீல் அரசியல்வாதிகள் இதற்குப் பின்னால் இருப்பதாகவும், இந்த சதியைத் தோற்கடிக்க தங்களால் முடிந்த அனைத்தையும் செய்வார்கள் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு உறுதியளித்து.

எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல, ரவூப் ஹக்கீம், பாட்டலி சம்பிக்க ரணவக்க, மனோ கணேசன் ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட இந்தப் பிரேரணையை பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, ரஞ்சித் மத்தும பண்டார, ரஜித சேனரத்ன, அசோக அபேசிங்க ஆகியோர் ஆமோதித்ததோடு அனைத்து உறுப்பினர்களும் ஒருமனதாக இதை ஏற்றுக் கொண்டனர்.

## குறுகிய நேரத்துக்கு...

தலைமையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக்கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்கமைய, இன்று முற்பகல் 10 மணிமுதல் மாலை 4.30 மணிவரை நாடாளுமன்ற அமர்வுகள் முன்னெடுக்கப்படும் என செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்க தெரிவித்தார்.

இன்று காலை 10 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை நிதி முகாமைத்துவப் பொறுப்பு (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு, 2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை, ஏற்றுமதி இறக்குமதி (கட்டளை) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

மேலும், நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தை முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அத்தோடு, நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்கு நேரம் ஒதுக்காது, மதியபோசனத்துக்காக சபை நடவடிக்கைகளை இடைநிறுத்தாது தொடர்ந்தும் விவாதத்தை முன்னெடுத்துச்செல்ல தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## தேர்தல் மறுசீரமைப்பு...

பணியாட்தொகுதியின் பிரதானியும், நாடாளுமன்ற பிரதி செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

முன்மொழிவுகள் மற்றும் யோசனைகளை அனுப்பிவைக்க விரும்புவோர் செயலாளர், நாடாளுமன்ற விசேட குழு, இலங்கை நாடாளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

## யாழ். முஹம்மதியா...

பகிரங்க அறிவித்தல்களுக்கு மேலதிகமாக இப்பள்ளிவாசலின் தலைவரை திணைக்கள உத்தியோகத்தர்கள் நேரில் சந்தித்து எச்சரிக்கை செய்திருந்தும் இவ்வாறு பொறுப்பற்ற முறையில் நடந்திருப்பது மிகவும் கவலை தருவதாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சகல பள்ளி நிர்வாகிகளும் கொவிட்-19 சுகாதார வழிமுறைகளையும் பயணக் கட்டுப்பாட்டினையும் கருத்திற்கொண்டு எந்தச் சந்தர்ப்பத்திலும் பள்ளிவாசல்களில் மக்கள் ஒன்றுகூடுவதை தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. நிவாரணப் பணிகளுக்காக தேவைப்பட்டால் மாத்திரமே பாதுகாப்புத்துறை மற்றும் சுகாதாரத்துறையினரின் அனுமதியுடன் நிர்வாகிகள் மாத்திரம் ஒன்றுகூடலாம். அதான் சொல்வதற்காகவும் கொவிட் - 19 அல்லது நிவாரணம் தொடர்பான விசேட அறிவித்தல்களைச் செய்யவும் முஅத்தின் அல்லது இமாம் மாத்திரம் பள்ளிவாசலில் நுழைய அனுமதிக்கப்படலாம் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## மட்டக்களப்பில்...

தொற்றை கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரமுடியும் - என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணவதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்தார்.

மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

இந்த பயணத்தடை விதிக்கப்பட்டதன் பின்னர் வாழ்வாதாரத்தை இழந்த, வறிய குடும்பங்களுக்கான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவாக 82,833 குடும்பங்களுக்கு 41 கோடியே 41 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாவை இதுவரை பிரதேச செயலகங்கள் மூலமாக வழங்கியுள்ளோம்.

இதேவேளை, அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைய தடுப்பூசி ஏற்றும் பணி எமது மாவட்டத்துக்கும் 25 ஆயிரம் கிடைக்கவிருக்கின்றது இந்தத் தடுப்பூசிகளை 6 பிரிவுகளாக பிரித்து அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் சுகாதார அமைச்சு கேட்டுக்கொண்டதற்கிணங்க எமது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எடுத்துவருகின்றார்.

எமது மாவட்டத்தில் முதியோர் இல்லங்களில் வாழும் 146 பேர் இருக்கின்றனர். அவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும் அதேவேளை, கொரோனா அதிகமாக காணப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், குறிப்பாக பொதுமக்களுடன் நேரடி தொடர்பை பேணுகின்ற அல்லது களவிஜயங்களில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள், உட்பட 6 வகையாக பிரிக்கப்பட்டு அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி வழங்கப்படும்.

மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் 5 கிராமசேவகர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டு முடக்கப்பட்ட நிலையில் 4 கிராம சேவகர் பிரிவுகள் விடுவிக்கப்பட்டதுடன், நொச்சிமுனை கிராமசேவகர் பிரிவு தொடர்ந்தும் முடக்கப்பட்டுள்ளதுடன் ஏறாவூர்நகர் கிராமசேவகர்- 2 பிரிவு உட்பட இரண்டு கிராமசேவகர் பிரிவுகள் மாத்திரமே மாவட்டத்தில் தற்போது தனிமைப்படுத்தப்பட்டு முடக்கப்பட்டுள்ளன - என்றார்.

## ஓட்டமாவடி சிறுவன்...

குறித்த சிறுவன் சிலவேளை பாம்பு தீண்டி உயிரிழந்திருக்கலாம் என்று குடும்பத்தினர் சந்தேகிப்பதாக மஜ்மா நகர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் ஏ.எல்.சமீம் தெரிவித்தார்.

மரணமடைந்த சிறுவனின் உடல் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் நேற்று மாலை மேற்கொள்ளப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கண்டியில் மேலும் 12 தேசிய பாடசாலைகளுக்கு அனுமதி

## இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவிப்பு

(கண்டி)

ஆயிரம் தேசிய பாடசாலைகள் அமைக்கும் அரசின் திட்டத்தின் கீழ் கண்டி கங்கவட்டகோரளை பிரதேச செயலாளர் பிரிவில் மேலும் 12 பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாகத் தரமுயர்த்த கல்வி அமைச்சு அனுமதியளித்துள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார் .

கண்டி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார் .

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஆயிரம் தேசிய பாடசாலைகள் அமைக்கும் அரசின் திட்டத்தின் கீழ் தேசிய பாடசாலைகளாக கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் மகளிர்



கல்லூரி, விகாரமகாதேவி மகளிர் கல்லூரி, ஹேமமாலி மகளிர் கல்லூரி, சீத்தாதேவி மகளிர் கல்லூரி, சுவர்ணமாலி மகளிர் கல்லூரி, வாரியபொல ஸ்ரீ சுமங்கள கல்லூரி, புனித சில்வெஸ்டர்ஸ் கல்லூரி, வித்தியார்த்த கல்லூரி, பேராதனை மத்திய கல்லூரி, லும்பினி ரோயல் கல்லூரி, பெரவஸ்ட் வித்தியாலயம், சரசவி உயன வித்தியாலயம் என்பனவாகும். பிரபல பாடசாலைகளுக்கு மாணவர்களை சேர்ப்பதில் பெற்றார் கடும் அவஸ்தைக்குள்ளாவதால் அதனை நிவர்த்திக்கும் வகையில் புதிதாக ஆயிரம் தேசிய பாடசாலைகளை ஆரம்பித்து அபிவிருத்தி செய்ய அரசு மேற்கொண்ட முயற்சியின் ஒரு கட்டமாகவே இப்பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

கடந்த காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட "அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை" என்ற திட்டம் வெறும் பெயர்ப் பலகைக்கு மட்டுமே எல்லைப்படுத்தப்பட்டிருந்தது. எனவே, இப்புதிய திட்டத்தின் மூலம் தேவையான வளங்களை வழங்கி பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படும் - என்றார் .

## காணாமலாக்கப்பட்ட மகனை தேடிய தாயொருவர் உயிரிழப்பு!

இறுதிப் போரின்போது காணாமலாக் கப்பட்ட தனது மகனைத் தேடிவந்த தாயொருவர் வவுனியாவில் உயிரிழந்துள்ளார்.

2009 இறுதிப் போரில் முள்ளிவாய்க்காலில் காணாமலாக்கப்பட்ட செஞ்சுடர் மாஸ்டரின் தாயாரும், வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஊடகப் பேச்சாளர் அ.ஈழம் சேகுவேராவின் தாயாருமாகிய தேவகியம்மா புற்றுநோயினால் நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளார்.

வவுனியாவை வசிப்பிடமாகக் கொண்ட அவர் காணாமலாக்கப்பட்ட தனது மகனை கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகத் தேடி அலைந்திருந்த நிலையில், மகனை காணாமல் மரணமடைந்துள்ளார். மகன் பற்றிய நம்பகமான தகவல் அறியாமலும், நீதி மறுக்கப்பட்ட நிலையிலும் இறைபதம் எய்திய தாயாருக்கு தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, காணாமலாக்கப்பட்ட உறவுகளின் வவுனியா சங்கத்தினர் தமது இரங்கல் அஞ்சலிகளை தெரிவிப்பதோடு, தாயாரின் குடும்பத்தினரது துயரிலும் கலந்துகொள்கின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

## புதுக்குடியிருப்பில் கைதான 10 பேரும் பிணையில் விடுதலை

புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்த நிலையில் கைதாகிய பத்து பேருக்கும் பிணை வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பல நூற்றுக்கணக்கான கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் பயணக்கட்டுப்பாடு நடைமுறையிலுள்ள சூழலிலும் புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

அதற்கு முன்னர் நேற்று அதிகாலை 5.40 மணியளவில் புதுக்குடியிருப்பு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பிரதேச சபை உப தவிசாளர் உட்பட்ட பத்து பேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் அனைவரிடமும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் பொலிஸாரினால் வாக்குமூலம் பெறப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## முல்லைத்தீவில் முடக்கப்பட்ட கிராமங்கள் விடுவிப்பு

முல்லைத்தீவில் முடக்கப்பட்டிருந்த 11 கிராமங்களும் நேற்று அதிகாலை முதல் விடுவிக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவில் ஆடைத் தொழிற்சாலை மூலம் ஏற்பட்ட கொரோனா பரவலையடுத்து இக்கிராமங்கள் முடக்கப்பட்டன. இந்நிலையில் நேற்று ஆடைத் தொழிற்சாலை மீளத் திறக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. இது சர்ச்சையாகியிருந்தது. கிராமங்களை விடுவிக்காமல் ஆடைத் தொழிற்சாலை இயங்குவதா என்று எதிர்ப்பு வெளியிடப்பட்டது. இதனையடுத்து நேற்று கிராமங்கள் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் ஆயிரத்தைக் கடந்தது கொரோனா தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை!

**வவுனியா மாவட்டத்தில் கொரொனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை கடந்துள்ளதுடன், மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 17 ஆக அதிகரித்துள்ளது.**

**கடந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் 6ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வவுனியா மாவட்டத்தில் 1040 கொரோனா தொற்றுக்குள்ளானோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.**

**அவர்களில் அநேகமானவர்கள் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**இதேவேளை, வவுனியாவில் கொரோனா தொற்று காரணமாக இதுவரை 17 பேர் மரணமடைந்துள்ளனர். அவர்கள் அனைவரும் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.**

## இரத்தினபுரியில் நடமாடும் இரகசிய சொகுசு விடுதிகளால் இளைய தலைமுறை பாதிப்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி நகரம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் அதிகரித்து வரும் விபச்சார கலாசாரம் குறித்து பெரும் அசௌகரியங்களை தாங்கள் எதிர்கொள்வதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையால் இளம் தலைமுறையினர் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோர் பெருமளவு சீர்கெடும் நிலைமைகளுக்குள்ளாகி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் சம்பிரதாயபூர்வமாக விடுதிகளில் இடம்பெற்று வந்த இந்த விபச்சாரத் தொழில், பொலிஸாரால் சுற்றி வளைக்கப்படுவதால் நவீன முறையில் நடமாடும் விபச்சார விடுதிகளாக சூட்சுமமான முறையில் இயங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக முச்சக்கரவண்டிகள் அதிகமாக பயன்படுத்தப்படுவதாகவும், இவற்றுக்கு அடிமையானோர் தங்களுக்கு பாதுகாப்பான இடங்களுக்கு முச்சக்கர வண்டிகளில் அழைத்துச் செல்லப்படுவதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு விபச்சாரத்துக்கு அடிமையானோரிடம் அதிகமான தொகை கறக்கப்படுவதாகவும், இவ்விடயத்தில் இளம்பராய இளைஞர்களுடன் பாடசாலை மாணவர்கள் அதிகமாக பாதிக்கப்பட்டு வருவதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, இவ்விடயத்தில் பொலிஸாரின் செயற்பாடுகள் அதிகரிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதோடு, தமது வீடுகளிலிருந்து வெளியேறும் இளைஞர்கள், மாணவர்கள் விடயங்களில் அவதானத்துடன் செயற்படுமாறு பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிறேட்வெஸ்டனில் மேலும் ஆறு பேருக்கு கொரோனா

(தலவாக்கலை)

தலவாக்கலை, கிறேட்வெஸ்டன் தோட்டத்தில் 6 பேருக்கு கொவிட்-19 கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் கிறேட்வெஸ்டன் தோட்டத்தில் 4 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதையடுத்து அவர்களுடன் நெருங்கிய தொடர்பிலிருந்த 36 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் அறிக்கைகள் வெளியாகிய நிலையில், அதில் 3 பெண்கள், ஒரு ஆண் மற்றும் இரண்டு சிறுமிகளுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுக்குள்ளான அனைவரும் தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களுடன் நெருங்கிய தொடர்பிலிருந்த 6 குடும்பங்களைச் சேர்ந்த 31 பேர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனக் கொட்டகலை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மேலும் தெரிவித்துள்ளது.

## கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 1,742 ஆக அதிகரிப்பு

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 46 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆயிரத்து 742 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் நாட்டில் 2 ஆயிரத்து 976 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 205,333 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த மேலும் 1,172 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 167,304 ஆக அதிகரித்துள்ளது.

## மதுபானம் எடுத்துச் சென்ற நபரொருவர் கைது!

நாட்டில் அமுலிலுள்ள பயணத்தடையின் போது மதுபான விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதோடு, நாடு முழுவதும் உள்ள மதுபான விற்பனை நிலையங்கள் மதுவரித் திணைக்களத்தினால் சீல் வைக்கப்பட்டு மூடப்பட்டுள்ளன.

இந்நிலையில், யாழ்ப்பாணம்-கண்டி பிரதான வீதியில் அரியாலை மாம்பழச் சந்திக்கு அண்மையில் முச்சக்கர வண்டியொன்றில் மதுபானத்தை விற்பனைக்காக எடுத்துச் சென்ற ஒருவர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து 300 பியர் போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்டவர் விசாரணையின் பின் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்தார்.



கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில் தீ விபத்துக்குள்ளான எக்பிரஸ் பேர்ள் கப்பல் கடலுக்குள் மூழ்கிவரும் நிலையில், விமானப்படையினரால் நேற்று மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளின்போது கப்பலின் தோற்றம் இவ்வாறு அமைந்திருந்தது.

## 14 வயது சிறுமி தற்கொலை; பலாங்கொடையில் சம்பவம்


(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை தியவின்ன பிரதேசத்தில் 14 வயது சிறுமியொருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

பாடசாலை மாணவியான இவர் தனது கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும், இச்சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் கல்தோட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து பிரேத பரிசோதனை நேற்று முன்தினம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## 96 கிலோ கேரள கஞ்சா கடற்படையினரால் மீட்பு







நாகர்கோவில் கடற்பிரதேசத்தில் கடற்படையினரால் நேற்று முன்னெடுக்கப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையின்போது 96 கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

வடக்கு கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பின்போது கடற்கரையை அண்மித்த பகுதியில் 03 பைகளில் சுற்றப்பட்ட நிலையில் இந்த 96 கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. கடற்படையினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கையினால் இந்த கேரள கஞ்சா தொகை கைவிடப்பட்டிருக்கலாம் எனக் கடற்படையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இந்த கேரள கஞ்சாவின் பெறுமதி 28 மில்லியன் ரூபாவாகும்.

## வீட்டில் உயிரிழந்த மூதாட்டிக்கு கொரோனா தொற்று

(மஹூர சுதத் செல்லஹேவா)

ஹட்டன், காமினிபுர பிரதேசத்தில் மூதாட்டியொருவர் தனது வீட்டிலேயே உயிரிழந்துள்ளதுடன், அவரின் சடலத்துக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஹட்டன், டிக்கோயா நகர சபையின் சுகாதார பிரிவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், காமினிபுர பிரதேசத்தில் 82 வயதுடைய மூதாட்டி ஒருவர் அவரின் வீட்டில் உயிரிழந்துள்ளார். அதன் பின்னர் அவரின் சடலம் டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. வைத்தியசாலையில் உயிரிழந்த மூதாட்டியின் சடலத்துக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே அவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவரின் சடலத்தை கொரோனா சட்டதிட்டங்களுக்கமைய எரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவருடன் நெருங்கிப் பழகியவர்களை சுயதனிமைப்படுத்தலுக்குட்படுத்தி அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## இன்றும் நாளையும் மழையுடனான காலநிலை அதிகரிக்கலாம்

### வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

நாட்டில் தென்மேற்குப் பிரதேசங்களில் இன்றும் (08) நாளைய தினமும் (09) மழையுடன் கூடிய காலநிலை தற்காலிகமாக அதிகரிக்கக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்திணைக்களம் நேற்று நண்பகல் வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மேல், சப்ரகமுவ, மற்றும் வடமேல் மாகாணங்களிலும், காலி, மாத்தறை, நுவரெலியா மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாகப் பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் என்று அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

## தொழில்நுட்பக் கோளாறினால் விமானப்படையின் செஸ்னா-150 திருமலையில் தரையிறக்கம்



விமானப்படைக்குச் சொந்தமான விமானிகளின் ஆரம்ப பயிற்சிக்காகப் பயன்படுத்தப்படும் செஸ்னா-150 (cessna-150) விமானம் நேற்று தொழில்நுட்பக் கோளாறு காரணமாகத் திருகோணமலை, நிலாவெளி கடற்கரையின் வடக்கில் அமைந்துள்ள எரக்கண்டி பிரதேசத்தில் அவசர தொழில்நுட்பக் கோளாறு காரணமாகத் தரையிறக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் கடற்படையினரால் அமைக்கப்பட்டுள்ள சீனத்துறைமுக அறிவியல் முகாமில் நேற்றுக் காலை 10.20 மணியளவில் ஆகாயத்துக்குச் சென்ற இந்த விமானம் முற்பகல் 10.48 மணியளவில் அவசர தொழில்நுட்பக் கோளாறு காரணமாகத் தரையிறங்கியுள்ளது. இந்த விமானத்திலிருந்த விமானிகள் இருவரும் பாதுகாப்பாக இருப்பதாக விமானப்படை தெரிவித்துள்ளது. விமானிகளின் திறமையினால் இந்த விபத்தை தவிர்க்கக் கூடியதாக இருந்ததாகவும், இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்காக விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் விமானப்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900 / 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com / thaarticle@yahoo.com

2021, ஜூன் 08ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# கவனிக்குமா அரசு?

முல்லைத்தீவிலுள்ள சில பகுதிகளில் தனிமைப்படுத்தல் சட்டங்கள் நிறைவடையும்வரை ஆடைத் தொழிற்சாலையை திறக்க அனுமதி வழங்க வேண்டாம் எனக் கோரி வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம், ஜனாதிபதிக்கு நேற்றுமுன்தினம் அனுப்பிவைத்துள்ள கடிதமொன்று தொடர்பில் கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள ஹைட்ராமணி ஆடைத் தொழிற்சாலையானது இன்றுவரை இலங்கையின் கொவிட்-19 தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் மூடப்பட்டிருக்கின்றது.

கடந்த மாதம் அந்த ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் சிலருக்கு கொவிட்-19 தொற்று உறுதிசெய்யப்பட்டதைத் தொடர்ந்து அங்கு பணிபுரியும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஊழியர்கள், பணியாளர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

அதில் 300இற்கும் மேற்பட்டவர்களுக்கு தொற்று பரவியிருந்தமை அறியப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டனர்.

அதனால் இலங்கையின் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் பல பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டதுடன், ஆடைத் தொழிற்சாலையும் உடன் மூடப்பட்டது.

14 நாட்கள் தனிமைப்படுத்தல் சட்ட நடைமுறைகள் கடந்த 31ஆம் திகதியுடன் நிறைவடைந்தன. ஆனால், இன்றுவரை ஆடைத் தொழிற்சாலை அமைந்துள்ள புதுக்குடியிருப்பு பிரதேசம் உட்பட மாவட்டத்தின் 9 கிராம சேவையாளர் பிரிவுகள் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்படவில்லை.

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளின் கீழ் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் வர்த்தக நடவடிக்கைகள், பொது போக்குவரத்து உட்பட்ட பயண நடவடிக்கைகள், ஒன்றுகூடல்கள், நடமாட்டங்கள் முற்றாக தடைசெய்யப்பட்டிருக்க வேண்டும் என்பது கொவிட்-19 சட்ட நடைமுறையாகும்.

மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்பதுடன், நீதிமன்றிலும் அரசாங்கத்தினால் வழக்கும் தாக்கல்செய்ய முடியும். முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒன்பது கிராமசேவையாளர் பிரிவுகள் இன்னமும் தனிமைப்படுத்தலுக்கு உட்பட்ட பிரதேசங்களாகும். தனிமைப்படுத்தல் நீக்கப்படாமையினால் அது நீடிக்கப்பட்டதாகவே அர்த்தமாகும்.

இருந்தபோதும் ஆடைத்தொழிற்சாலை மீண்டும் திறக்கப்படவிருப்பதாகவும் பணியாளர்கள் வேலைக்குத் திரும்பவேண்டும் எனவும் தொழிற்சாலை நிர்வாகத்தால் அழைக்கப்பட்டுள்ளனர்.

இது இன்னமும் தனிமைப்படுத்தல் சட்டத்துக்குட்பட்ட கிராமத்தினுள் குறித்த தொழிற்சாலை இயங்க அனுமதிப்பதானது சட்டத்துக்குப் புறம்பானதோடு சட்ட மீறலுமாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தொற்று அதிகரிப்புக்கு இந்த ஆடைத் தொழிற்சாலையும் முக்கிய காரணமாகும்.

இன்றுவரை 600இற்கும் மேற்பட்டவர்கள் தொற்றினால் பாதிக்கப் பட்டுள்ளனர். மக்கள் நீண்டநாட்கள் தனிமைப்படுத்தலுடன், பயணத்தடையினாலும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வறுமையின் எல்லைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். எனவே, இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட வகையில் உங்களுக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி குறிப்பிட்ட பிரதேசங்களின் தனிமைப்படுத்தலை நீக்கும் வரை ஆடைத் தொழிற்சாலையை மீளத் திறப்பதற்கு அனுமதி வழங்க வேண்டாம் என அவசரமாகவும், வினயமாகவும் கேட்டுக்கொள்வதாக வினோ எம்.பி. அனுப்பிய கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே மட்டக்களப்பிலும் இதேபோன்று ஒரு பிரச்சினை வந்தது. பணியாளர்களின் நலனை கவனிக்காமல் - கருத்திற்கொள்ளாமல் வேலைக்கு வருமாறு அந்தத் தொழிற்சாலை நிர்வாகங்கள் அழைத்த காரணத்தினால் அங்கும் சர்ச்சை ஏற்பட்டது.

தமிழர் தாயகத்தில் ஆடைத் தொழிற்சாலைகள் அமைந்தமையும் அவை மூலம் பெரும்பாலானவர்களுக்கு தொழில்வாய்ப்பு வந்தமையும் இரகசியமல்ல. அவை வரவேற்கப்படவேண்டியவையே.

ஆனால், அவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் நலன் முக்கியமல்லவா? அரசாங்கமும், பாதுகாப்புத்துறையினரும் இதனை வேறுமாதிரி நோக்குகின்றனர்.

அந்தப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறான விடயங்களில் தலையிடும்போது, ஆடைத் தொழிற்சாலைகளை அவர்கள் மூடச்செய்து நாட்டின் பொருளாதாரத்தை பாதிப்படையவைக்க முயல்கின்றனர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

இது நியாயமல்ல. தென்பகுதியில் இதேபோன்றதொரு நிலைமை ஏற்பட்டு அங்குள்ள மக்கள் பிரதிநிதிகள் இவ்வாறு கூறினால் அவர்களை நாட்டுக்கு எதிரானவர்கள் என்று பார்க்க முடியுமா ?

கொரோனா வைரஸ் பரவல் என்பது ஒரு பொதுவான பிரச்சினை. அதனால் மக்களும் நாடும் பாதிக்கப்படக்கூடாதென்பது அனைவரினதும் பொதுவான விருப்பமும் கூட. இதில் தமிழ், சிங்கள, முஸ்லிம், மலாயர், பறங்கியர் என்ற பேதமெல்லாம் கிடையாது.

அரசாங்கம் அந்த கண்ணோட்டத்தில் இவற்றை பார்க்காமல் நீதியாக செயற்படவேண்டும் என வினோ எம்.பி. அதையே சுருக்கமாகக்கூறியிருக்கிறார்.

# விலங்கறுமனை தவிர்ந்த இடங்களில் மாடறுத்தால் 02 இலட்சம் ரூபா அபராதம்

## கல்முனை மாநகர சபை எச்சரிக்கை

(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் விலங்கறுமனை தவிர்ந்த இடங்களில் அனுமதியின்றி மாடுகளை அறுக்கவேண்டாம் என்று உத்தரவிட்டுள்ள மாநகர சபை, அவ்வாறு மாடறுப்பது கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட நபரிடம் 02 இலட்சம் ரூபா தண்டப்பணம் அறவிடப்படும் எனவும் அறிவித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் வெளியிட்டுள்ள விசேட அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

கொரோனா வைரஸ் தொற்று அபாயத்தை கருத்திற்கொண்டு அமுல்படுத்தப்பட்டிருக்கின்ற பயணத்தடை காரணமாக நாட்டிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் கடைகளும் மூடப்பட்டுள்ள நிலையில், மாட்டிறைச்சிக் கடைகளும் மூடி வைக்கப்பட்டிருக்கின்றன. எனினும், பொதுமக்களின் தேவையைக் கருத்திற்கொண்டு, கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் மாட்டிறைச்சியை நடமாடும் சேவை மூலம் விற்பனை செய்வதற்கு மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



இதற்கான மாடுகள் விலங்கறுமனைகளுக்கு கொண்டுவரப்பட்டு, அவை கால்நடை வைத்திய அதிகாரியினால் பரிசோதிக்கப்பட்டு, சட்டபூர்வமானதும் அறுவைக்கு உகந்ததுமான மாடுகள்தான் என உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், அங்கேயே பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் முன்னிலையில் முறைப்படி அறுக்கப்படுகின்றன.

எனினும், நடமாடும் மாட்டிறைச்சி விற்பனைக்கான அனுமதியை சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொண்டு, சிலர் விலங்கறுமனைகளில் அல்லாமல் வீடுகளிலும் வேறுசில இடங்களிலும் கள்ள மாடுகளை அறுத்து விற்பனை செய்வதாக முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. குறிப்பாக, திருடப்பட்ட மாடுகள், நோய்வாய்ப்பட்ட மாடுகள் மற்றும் அறுவைக்கு பொருத்தமில்லாத மாடுகள் அறுக்கப்பட்டு, மனித நுகர்வுக்கு உதவாத இறைச்சி விற்கப்படுவதாக எமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இவ்வாறு அனுமதியின்றி மாடுகள் அறுப்பதும் அம்மாட்டிறைச்சியை விற்பதும் சட்டவிரோதமான செயற்பாடாகும். இது தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஆகையினால், விலங்கறுமனை தவிர்ந்த இடங்களில் அனுமதியின்றி மாடறுப்பது கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட நபர்களிடம் 02 இலட்சம் ரூபா தண்டப்பணம் அறவிடப்படும் என கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் மேலும் தெரிவித்துள்ளார்.

# கொவிட்-19 தடுப்பூசி வழங்க பொதுமக்களுக்கு அறிவித்தல்

(நூருள் ஹுதா உமர்)

பொதுமக்களுக்கு கொவிட்-19 தடுப்பூசி வழங்குவதற்கான முன்னேற்பாடுகளுக்கான விளம்பர சுவரொட்டிகள் மற்றும் அறிவித்தல்கள் சாய்ந்தமருது பிரதேசத்தில் காட்சிப்படுத்தும் நடவடிக்கைகள் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம்.அல் அமீன் றிசாட் தலைமையில் சாய்ந்தமருதில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் வேண்டுகோளுக்கிணங்க சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் பொதுமக்களுக்கான கொவிட்-19 தடுப்பூசி வழங்குவதற்கான ஆயத்த நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

அந்தவகையில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியினால் முதலாவது சுவரொட்டி மற்றும் அறிவித்தல்கள் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டு, உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டதை தொடர்ந்து பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் மக்களுக்கான தெளிவூட்டல் சுவரொட்டிகள் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்கள், வர்த்தக நிலையங்கள், மதஸ்தலங்கள் போன்ற இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஜே.எம்.நிஸ்தார், பொதுச் சுகாதார பரிசோதகர்களான எம்.எம்.பைசல் முஸ்தபா, எம்.என்.எம்.பைலான், ஏ.எல்.எம்.அஸ்லம், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், சாய்ந்தமருது பிரதேச செயலக பல்நோக்கு அபிவிருத்தி செயலணி பயிலுநர்களும் கலந்துகொண்டனர்.





# திருமலையில் மான்களுக்கு உணவு வழங்கும் செயற்பாடு மீண்டும் ஆரம்பித்துவைப்பு

(ஹஸ்பர்.ஏ.ஹலீம்)

திருகோணமலையில் பிட்டெரிக் கோட்டைக்கு அருகில் அமைந்துள்ள மான்கள் மற்றும் சரணாலயத்தில் வாழும் மான்களுக்கும், தற்சமயம் அரசிடம் விசேட அனுமதி பெற்று உணவு வழங்கும் செயற்பாடு மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பயணத்தடை காரணமாக மான்கள் மேலதிகமாக உணவு தேடி திருகோணமலை வீதிகளில் அலைந்து திரிவதாக சமூக ஊடகங்களில் செய்திகள் வருகின்றன.

கடந்த சில வருடங்களாக இந்த மான்களுக்கு றோட்டரி கழகத்தின் சார்பில் காலை மற்றும் மாலை வேளைகளில் உணவு வழங்கப்பட்டு வந்தது.

பயணத்தடையின் காரணமாக உணவளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. தற்சமயம் அரசிடம் விசேட அனுமதிபெற்று இந்த மான்களுக்கான உணவு வழங்கும் செயற்பாடு மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

றோட்டரி கழகத்தின் சார்பில் மருது இச்செயற்பாட்டை நடைமுறைப்படுத்துகிறார். திருகோணமலையில் வாழும் மற்றும் இங்கு வரும் மக்கள், தங்களால் முடிந்தளவு மான்கள் சரணாலயத்துக்கு நேரில் சென்று உணவு அளித்து எங்கள் மண்ணில் வாழும் இந்த அரிய உயிரினத்தைப் பாதுகாப்போம் என்று தெரிவித்துள்ளனர்.







# மட்டு. இலுப்படிச்சேனை பகுதியில் மின்சாரம் தாக்கி பெண்ணொருவர் பலி

(ஏறாவூர் நிருபர் நாஸர்)

மின்சார உபகரணத்தில் தேநீர் தயாரித்தவேளை மின்சாரத்தினால் தாக்கப்பட்டு 56 வயதுடைய பெண்ணொருவர் உயிரிழந்த சம்பவமொன்று மட்டக்களப்பு - இலுப்படிச்சேனை - காரக்காடு பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

வந்தாறுமூலை பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான பேரின்பம் தெய்வானை என்பவரே உயிரிழந்தவரென கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

காரக்காடு பகுதியில் வசிக்கும் தனது சகோதரியின் வீட்டில் தங்கியிருந்து கல்வி கற்கின்ற தனது மகளை குசலம் விசாரிக்கச் சென்றிருந்த நிலையில், அங்கு சமையல் வேலைகளை முடித்துவிட்டு தேநீர் தயாரிக்க முயன்றுள்ளார்.

அச்சந்தர்ப்பத்தில் மின் உபகரணத்தில் சேதமடைந்திருந்த வயர் வழியாக மின்சாரம் தாக்கியதில் இவர் ஸ்தலத்திலேயே பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த சடலத்தை திடீர் மரண விசாரணை அதிகாரி பார்வையிட்டு, குடும்ப உறவினர்களிடம் வாக்குமூலங்களைப் பதிவுசெய்தார்.

அதையடுத்து உடல்கூறு மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கான சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டது. கரடியனாறு பொலிஸார் இச்சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வாழைச்சேனை பெண் குவைத்தில் மரணம்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

மட்டக்களப்பு மாவட்டம் கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட செம்மண்ணோடை ஓடாவியார் வீதியில் வசித்துவந்த பெண்ணொருவர் நேற்று முன்தினம் குவைத் நாட்டில் மரணமடைந்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தாயான 47 வயதுடைய அபூபக்கர் சித்தி பரீனா எனும் பெண்மணியே இவ்வாறு மரணமடைந்துள்ளார். குறித்த பெண்மணி சுமார் ஒன்றரை வருடத்துக்கு முன்னர் குவைத் நாட்டிற்கு பணிப்பெண்ணாக சென்றுள்ளார்.

இவ்வாறு அங்கு தொழில் புரிந்துவந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு தூங்கிய நிலையில் மாரடைப்பு ஏற்பட்டு மரணமடைந்ததாக தமக்கு குவைத் நாட்டிலிருந்து தகவல் கிடைத்ததாக குடும்பத்தினர் தெரிவித்தனர்.

மரணமடைந்த பெண்ணின் ஜனாஸாவை குவைத்தில் நல்லடக்கம்செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக குடும்பத்தினர் மேலும் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பில் 25 ஆயிரம் பேருக்கு இன்றுமுதல் தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மயூரன் தெரிவிப்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 25 ஆயிரம் கொரோனா தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. இதில் அபாய நிலையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஏற்றப்படும் - என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் பரிந்துரைக்கமைய 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி ஏற்றவேண்டிய கட்டாயமாகும். இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் தொகை 6 இலட்சம். இதில் 30 வயதுக்கு மேற்பட்டோர் 3 இலட்சத்து 11 ஆயிரம் பேர்.

எனவே, 3 இலட்சத்து 11 ஆயிரம் பேருக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றவேண்டியுள்ளது. இருந்தபோதும் நாளை 25 ஆயிரம் சைனோபாம் தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளன. இதில் அபாய நிலையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவு காரியாலயங்களில் ஏற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

# பயணத்தடை காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு கல்முனை மாநகர மேயரால் உணவுப்பொருட்கள்

## ஊடகவியலாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க முன்னெடுப்பு



(பாறுக் ஷிஹான்)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பயணத்தடை கட்டுப்பாட்டில் பாதிக்கப் பட்டுள்ள யாசகர்கள், மீனவர்கள், சுயதொழில் ஊக்குவிப்பாளர்களுக்கு ஊடகவியலாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க உணவு வழங்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம், கல்முனை பிராந்தியத்தில் பொது இடங்களில் தற்போது கொரோனா தொற்று காரணமாக பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நிலையில், இங்குள்ள யாசகர்கள், மீனவர்கள், சுயதொழிலாளர்கள் பலர் உணவின்றி பெரும் சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க நேற்று முன்தினம் கல்முனை மாநகர சபையின் உறுப்பினரும் பொதுஜன பெரமுன கட்சியின் முக்கியஸ்தருமான ஏ.எல்.றபீக், பயணத்தடையினால் நிர்க்கதியான இப்பகுதியிலுள்ள 75 மீனவர்கள், சுயதொழில் செய்யும் தொழிலாளர்கள், யாசகர்களுக்கு உணவுகளை வழங்கினார்.

இந்த மனிதாபிமானப் பணியை தனது சபை அமர்வில் வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவில் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிராந்தியத்தின் சவால்களை வெற்றிகொள்ள உறுப்பு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு பேணப்படும்

## பிம்ஸ்டெக்கின் 24ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜனாதிபதி வாழ்த்துச் செய்தி

பிம்ஸ்டெக் அமைப்பினூடாக பிராந்தியத்தின் சவால்களை வெற்றிகொள்வதற்காக, உறுப்பு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பைச் சிறந்த முறையில் பேணவும், பகிர்ந்த முன்னேற்றத்திற்கான பல வாய்ப்புகளைப் பயன்படுத்தவும் உறுப்பு நாடுகளை ஊக்குவிப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிம்ஸ்டெக் அமைப்பின் 24ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜனாதிபதி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்தச் செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,



பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார கூட்டுறவிற்கான வங்காள விரிகுடா (பிம்ஸ்டெக்) முன்னெடுப்பின் 24ஆவது ஆண்டு விழாவின் மகிழ்ச்சியான சந்தர்ப்பத்தில், இலங்கை அரசாங்கத்தினதும், மக்களினதும் வாழ்த்துகளையும், நல்லாசிகளையும் தெரிவிக்கக் கிடைத்ததையிட்டு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். 1997ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த மதிப்புமிக்க முன்முயற்சியின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராக நாங்கள் பெருமிதமடைகிறோம்.

பிம்ஸ்டெக் அமைப்பின் தற்போதைய தலைவர் என்ற வகையில், இலங்கை, 5ஆவது பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில் நிறைவேற்றும் நோக்கத்துடன், பிம்ஸ்டெக் சாசனம், பிம்ஸ்டெக் துறைகள் மற்றும் உபதுறைகளின் சீரமைப்பு, பிம்ஸ்டெக் இராஜதந்திர கல்விக்கூடங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்கிடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பவற்றை உறுப்பு நாடுகள் கூட்டாக இறுதி செய்த, 17ஆவது பிம்ஸ்டெக் அமைச்சரவைக் கூட்டம் உட்பட எட்டு முக்கிய பிம்ஸ்டெக் கூட்டங்களை கூட்டியது. பிம்ஸ்டெக் செயலகம், இந்த பெறுபேற்றினை அடைந்துகொள்வதற்கு, பிம்ஸ்டெக் சட்டகத்தின் கீழ் பாராட்டத்தக்க வகையில் ஆதரவளித்து, வசதிகளை செய்தது. கொவிட் -19 பெருந்தொற்றுப் பரவல் தணிந்து, உறுப்பு நாடுகளில் பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் நிலைமைகளுக்கு அமைய, இவ்வருட பிற்பகுதியில் 5ஆவது பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டுக்கான உபசரிப்பு ஏற்பாடுகள் குறித்து இலங்கை கவனம் செலுத்தி வருகின்றது என்பதை நான் இச்சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். பிம்ஸ்டெக் அமைப்பு, உலக மக்கள் தொகையில் 22 சதவிகிதத்தை பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும், உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவீதம் மட்டுமே இவ்வமைப்பு பங்களிப்புச் செய்கிறது. எனவே, பிராந்தியத்தின் சவால்களை வெற்றிகொள்வதற்காக, உறுப்பு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை சிறந்த முறையில் பேணவும், பகிர்ந்த முன்னேற்றத்திற்கான பல வாய்ப்புகளைப் பயன்படுத்தவும், உறுப்பு நாடுகளை நான் பலமாக ஊக்குவிக்கிறேன்.

கடந்த காலங்களைப் போலவே, அனைத்து பிம்ஸ்டெக் முயற்சிகளுக்கும் இலங்கை முழுமையான அர்ப்பணிப்புடன் உள்ளது என நான் உறுதியளிக்கிறேன். எமது மக்களுக்காக பகிரப்பட்ட சுபீட்சத்தையும் அமைதியையும் அடைந்துகொள்வதற்கு, அனைத்து பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளும் இணக்கமாகச் செயற்படுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

# அமைச்சர் அலி சப்ரி பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாக சென்று சந்திப்பு



சீரற்ற காலநிலை காரணமாக வெள்ளத்தால் இடம்பெயர்ந்த கொலன்னாவ மற்றும் வெல்லம்பிட்டிய பகுதிகளைச் சேர்ந்த மக்களை நீதி அமைச்சர் அலி சப்ரி நேற்று முன்தினம் பார்வையிட்டார்.

அமைச்சர் கொலன்னாவ ரஜ மகா விஹாரையை பார்வையிட்டதுடன், இடம்பெயர்ந்த மக்களுக்கு எவ்வாறு நிவாரணம் வழங்க வேண்டும் என்பது குறித்து கலந்தாலோசிப்பதற்கு கொலன்னாவ ரஜ மகா விஹாரையில் கொலன்னாவ தம்மிக தேரர், மகா சங்கம் மற்றும் உள்ளூர் அரசியல் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்காக தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள வெல்லம்பிட்டி அறிவியல் மேம்பாட்டுக் கல்லூரியிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாமுக்குச் சென்ற அமைச்சர், அங்குள்ள மக்களின் தேவைகள் குறித்து விசாரித்தார்.

பின்னர் அமைச்சர் வெல்லம்பிட்டியிலுள்ள கால்வான ரஜமஹா விகாரஸ்தனாயாவிலுள்ள இடம்பெயர்ந்த மையத்தைப் பார்வையிட்டு வெல்லம்பிட்டி மற்றும் கொலன்னாவ பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்களின் தேவைகள் குறித்தும் விசாரித்தார்.

மேலும், அமைச்சர் கொலன்னாவ ஜும்ஆ பள்ளிவாசலையும் பார்வையிட்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களின் தேவைகள் குறித்து விசாரித்தார்.

வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு வழங்குவது குறித்தும், வெள்ளம் குறைந்தவுடன், அது சூழ்ந்திருந்த வீடுகள் உள்ளிட்ட பொது இடங்களை எவ்வாறு சுத்தம்



செய்வது மற்றும் கொவிட்-19 தொற்றுநோய் சுகாதார வழிகாட்டுதல்களுக்கு முகங்கொடுக்கும் பேரழிவுகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பன குறித்தும் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தப் பகுதிகள் வருடம்தோறும் பலமுறை வெள்ளத்தை எதிர்கொள்வதால், நீண்டகால தீர்வுகள் காணப்பட வேண்டும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். இலங்கை பெற்றோலிய வளங்கள் நிறுவனத்தின் தலைவர் முஹம்மட் உவைஸ், கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை தவிசாளர் ரங்கஜீவா ஜெயசிங்க, துணைத் தலைவர் இந்தூனில் ஜகத்குமார, எதிர்க்கட்சித் தலைவர் சாலிய விக்ரமசிங்க மற்றும் சபையின் முன்னாள் உறுப்பினர்கள் உட்பட பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# மதுபோதையில் பணியாற்றிய கான்ஸ்டபிள் பணிநீக்கம்

(ஜூட் சமந்த)

மதுபோதையில் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைப் பணி இடைநீக்கம் செய்ய சிலாபம் பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

தங்கொட்டுவ பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு பணிநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்று முன்தினம் இரவு வன்னப்புவ, தோப்புவ வீதித் தடையில் கடமையில் ஈடுபட்டுள்ளார். இரவு 10 மணியில் சிலாபம் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரினால் அந்த வீதித்தடை பரிசோதனை செய்யப்பட்டபோது குறித்த அதிகாரி மதுபோதையில் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீரற்ற காலநிலையால் நான்கு பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த 6001 குடும்பங்கள் பாதிப்பு



(ஜூட் சமந்த)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் புத்தளம் மாவட்டத்தின் 04 பிரதேச செயலக பிரிவுகளில் 6 ஆயிரத்து 1 குடும்பங்களைச் சேர்ந்த 22 ஆயிரத்து 628 பேர் பாதிப்படைந்துள்ளதாக புத்தளம் மாவட்ட செயலக காரியாலயம் தெரிவித்துள்ளது.

நாத்தாண்டிய, சிலாபம், மாதம்பை மற்றும் மஹவெல ஆகிய பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த 175 கிராமசேவகர் பிரிவுகள் இதனால் பாதிப்படைந்துள்ளன. முறையாக மழைநீர் வழிந்தோடாமையினால் 40 முழுமையான சேதங்களும், 17 பகுதியளவிலான சேதங்களும் இடம்பெற்றுள்ளதாக மாவட்ட செயலகக் காரியாலயம் மேலும் தெரிவித்துள்ளது.

வெள்ளத்தில் அடித்துச் சென்று இருவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காணாமல் போயுள்ளார். பாதிப்புக்குள்ளாகியுள்ள தரப்பினருக்காக 08 முகாம்கள் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# குடு அஞ்சுவின் சகோதரரும் அவரது மனைவியும் கைது

## தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்ய பொலிஸார் நடவடிக்கை









பொலிஸாரால் தேடப்பட்டு வரும் கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய போதைப்பொருள் வியாபாரியான குடு அஞ்சு என்றழைக்கப்படும் நபரொருவரின் உறவுமுறை சகோதரர் ஒருவரும் அவரது மனைவியும் நேற்று முன்தினம் இரவு அத்துருகிரிய, மிலேனியம் பிரதேசத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

27 வயதுடைய சாமர சந்தருவன் மற்றும் 24 வயதுடைய பெண் ஒருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், குறித்த பெண் நாடக கலைஞர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துருகிரிய பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், இதன்போது 25 கிராம் ஐஸ் போதைப்பொருள், 14 இலட்சம் ரூபா பணம், 03 பணம் எண்ணும் இயந்திரங்கள், 03 கையடக்கத் தொலைபேசிகள், கார் என்பன இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த நபரின் தொலைபேசி அழைப்புகள் மற்றும் தொடர்புகளுக்கமைய பிலியந்தலை, கொட்டாவை, அத்துருகிரிய மற்றும் மஹரகம ஆகிய பிரதேசங்களுக்குச் சென்று சேர்க்கப்படும் பணம் எடுத்து வரப்பட்டுள்ளது. பின்னர் மீண்டும் கிடைக்கப்பெறும் தொலைபேசி அழைப்புக்கமைய பணம் எடுத்துச் சென்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. மூன்று தினங்களுக்கு முன்னர் 10 கோடி ரூபா பணம் கைமாற்றப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இவர்கள் இருவரையும் கடுவெல நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி தடுப்புக்காவலில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கருப்பூஞ்சையால் 921 பேர் தமிழகத்தில் பாதிப்பு

## விசேட நிபுணர் குழுவை நியமித்தது அரசு



தமிழகத்தில் 921 பேர் கரும்பூஞ்சை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தத் தொற்று எவ்வாறு ஏற்படுகிறது, இதற்கு மாற்று சிகிச்சை மற்றும் மாற்று மருந்து ஏதேனும் உள்ளதா போன்ற விபரங்களை அறிய 13 மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட நபர்களின் உடலிலுள்ள நோய் எதிர்ப்பாற்றல் குறைபாடுகளே இதற்குப் பிரதான காரணம் எனக் கூறப்படுகிறது. இதனால் உடல்நிலை மோசமாக பாதிக்கப்பட்டு, தீவிர சிகிச்சைக்குள்ளாக வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

நோயாளிகள் ஏற்கனவே நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவராக இருந்தால் அல்லது சர்க்கரை நோய் போன்ற நீண்ட நாட்களுக்கு நோய் பாதிப்புடையவராக இருந்தால், அவர்களுக்கு கரும்பூஞ்சை போன்ற நோய் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. மூளை நரம்பில் இந்த கரும் பூஞ்சை நோய்த் தொற்று பாதிப்பு ஏற்பட்டால், கண், மூளை நரம்புகள் என்பன பாதிக்கப்பட அதிக வாய்ப்புள்ளது. ஏற்கனவே தொற்றை கட்டுப்படுத்த போராடிக் கொண்டிருந்த நிலையில், இந்தக் கரும்பூஞ்சை நோய் மேலும் அச்சத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. அதனால்தான், கரும்பூஞ்சை நோயைத் தடுப்பது குறித்து ஆய்வு மேற்கொள்ள 13 பேர் கொண்ட நிபுணர் குழு அமைக்கப்பட்டது.

அந்தக் குழு இது தொடர்பில் ஆய்வுகளை நடத்தி அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழகத்தில் கொரோனா பாதிப்பு 22 வீதத்தால் வீழ்ச்சி

தமிழகத்தில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த 10 நாட்களில் கொரோனா வைரஸ் பாதிப்பு 22 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 20 ஆயிரத்து 421 கொரோனா நோயாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டனர். எனினும், தமிழகத்தில் 12 வீதமானோரே கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இதன் காரணமாக முடக்கத்தில் சில தளர்வுகளை ஏற்படுத்துவதற்கு தமிழக அரசு ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில் அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்வோரில் 30 வீதமானோரை கடமைக்கு அழைப்பது தொடர்பில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# 5 மில்லியன் ரூபா பெறுமதியான சட்டவிரோத சிகரெட் - மதுபான போத்தல்களுடன் நால்வர் கைது



விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய கடந்த 05ஆம் திகதி கொம்பனித்தெரு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, வோக்ஷோல் வீதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, சட்டவிரோதமாக தீர்வை வரியின்றி இறக்குமதி செய்யப்பட்ட மன்செஸ்டர் (MANCHESTER) வகையைச் சேர்ந்த ஒருதொகை சிகரெட் மற்றும் பஜாஜ் முச்சக்கர வண்டியுடன் சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அதனையடுத்து, இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரிடமும் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளுக்கமைய வோக்ஷோல் வீதி, கொம்பனித்தெரு, கொழும்பு-2 என்ற முகவரியில் அமைந்துள்ள வீடொன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. இதன்போது, சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட மன்செஸ்டர் வகையைச் சேர்ந்த சிகரெட் தொகை மற்றும் பைலேஸ் (BAILEYS) வகையைச் சேர்ந்த வெளிநாட்டு மதுபான போத்தல்களுடன் மேலும் ஒருவர் கைதுசெய்யப்பட்டு கொம்பனித்தெரு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு, நுவரெலியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 24, 28, 33 மற்றும் 43 வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதற்கமைய இவர்களிடமிருந்து 68 ஆயிரம் சிகரெட்டுகளும், 11 மதுபான போத்தல்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த பொருட்களின் பெறுமதி 5 மில்லியன் ரூபா என பொலிஸார் தெரிவித்தனர்.

# வடபழனி கோயிலுக்கு சொந்தமான 250 கோடி ரூபா சொத்து மீட்பு

சென்னை வடபழனி முருகன் கோயிலுக்கு சொந்தமான 250 கோடி ரூபா சொத்துகள் மீட்கப்பட்டுள்ளதாக அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு தெரிவித்துள்ளார்.



இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இருந்து இந்துக் கோயில்களை மீட்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்த நிலையில், இந்துக் கோயில்களின் சொத்துக்கள் அனைத்தும், வெளிப்படையாக இணையத்தளத்தில் வெளியிடப்படுமென ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு அறிவித்தது.

தி.மு.க. இந்துக்களுக்கு எதிரான கட்சி என்ற பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், எல்காட் நிறுவனத்தின் உதவியோடு, சிதிலமடைந்த கோயில் ஆவணங்கள் செம்மைப்படுத்தப்பட்டு, “ப்ளாக் செயின்” தொழில்நுட்பத்தின் அடிப்படையில், பாதுகாக்கப்படுமென முதல்வர் ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், சென்னை வடபழனி முருகன் கோயிலுக்கு சொந்தமான ரூ.250 கோடி மதிப்பிலான கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களை சந்தித்த அவர்,

சென்னை சாலிகிராமம், காந்தி நகரில் தனியார் வாகனங்கள், கட்டுமானக் கழிவுகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த 5.5 ஏக்கர் நிலம் தமிழக அரசால் மீட்கப்பட்டுள்ளது. கோயில் நிலங்களை ஆக்கிரமிப்பதை இந்து சமய அறநிலையத்துறை ஒருபோதும் அனுமதிக்காது. யார் தவறு செய்திருந்தாலும் சட்டம் தன் கடமையை செய்யும் என்றார்.

# பாகிஸ்தானில் ரயில்கள் மோதி விபத்து:
## 30 பேர் பலி; 50இற்கும் மேற்பட்டோர் படுகாயம்!



பாகிஸ்தானில் நேற்று திங்கட்கிழமை காலை இரு அதிவேக ரயில்கள் மோதிக்கொண்டதில் 30 பேர் பலியானதுடன், 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தான் தெற்கில் சிந்த் மாநிலம், தஹாக்கியில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாரிய சத்தத்துடன் இரு ரயில்களும் மோதிக்கொண்டதாக அப்பகுதியில் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். சம்பவத்தையடுத்து பொதுமக்களும் இராணுவத்தினரும் இணைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

அவ்வேளையில் பலரது உடல்கள் சிதறிக் காணப்பட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

மீட்புப் பணிகளை துரிதகதியில் மேற்கொள்ளுமாறு மாநில சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உமர் டுபெயில் பணிப்புரை வழங்கியிருந்தார்.

ரயில்கள் பயணம் செய்தபோது சரியான சமிக்ஞை காட்டப்படாததால் விபத்து சம்பவத்திலுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

# போகோ ஹராமின் தலைவர் தற்கொலை!



நைஜீரியாவில் இயங்கிவரும் போகோ ஹராம் என்ற தீவிரவாத அமைப்பின் தலைவர் அபூபக்கர் ஷெகாயு தற்கொலை செய்துகொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு ஆபிரிக்காவுக்கான இஸ்லாமிய அமைப்பினால் ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஒலிப்பதிவிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதல் சம்பவத்தின்போது தனக்குத்தானே வெடிப்பை ஏற்படுத்தி தற்கொலை செய்துகொண்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நைஜீரிய அரசாங்கம் அல்லது போகோ ஹராம் அமைப்பு இந்த விடயத்தை உறுதிசெய்யவில்லை.

ஆயினும், புலனாய்வுத் தகவலின் பிரகாரம் அபூபக்கர் உயிரிந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

# ஹரி - மேகனுக்கு பெண்குழந்தை; லிலிபெட் டயானா என பெயர் சூட்டினர்



பிரித்தானிய அரச குடும்பத்திலிருந்து பிரிந்து வாழும் இளவரசர் ஹரி மற்றும் மேகன் தம்பதியினருக்கு பெண்குழந்தையொன்று பிறந்துள்ளது. இதனை நேற்றுமுன்தினம் அவர்கள் உத்தியோகபூர்வமாக அறிவித்தனர்.

தனது தாயார் டயானாவின் நினைவாக லிலிபெட் டயானா என குழந்தைக்குப் பெயர் சூட்டியுள்ளார் ஹரி. பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் ஹரி - மேகன் ஆகியோர் கடந்த 2018ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்டனர்.

அதன்பின்னர் அரச குடும்பத்தைப் பிரிந்து தனித்து வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு ஆண் குழந்தையொன்றும் உள்ளது. இந்நிலையில், தனது தாயாரான டயானாவின் இறப்பு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதாகவும் இதனால் போதைக்கு அடிமையாகியிருந்ததாகவும் ஹரி அண்மையில் பரபரப்பான நேர்காணல் ஒன்றை வழங்கியிருந்தார்.

இந்நிலையிலேயே தங்களுக்குப் பிறந்துள்ள பெண்குழந்தைக்கு டயானா என்ற பெயரும் இணைக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் ட்ரெண்டிங்கான நடிகை ஸ்டோம்ஸ்



அமெரிக்காவின் பிரபல நடிகையான கர்ஸ்டன் ஸ்டோம்ஸின் பெயர் சமூக வலைத்தளங்களில் பெருவாரியாக பேசப்படுகிறது. அவர் மூளை தொடர்பான சத்திரசிகிச்சையொன்றை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்ததையடுத்து நலம்பெற வேண்டி ரசிகர்கள் கருத்துகளை பதிவிட்டு வருகின்றனர்.

சுகயீனமுற்றிருப்பதாக அவர் கடந்த வெள்ளிக்கிழமை இன்ஸ்டகிராமில் பதிவிட்டிருந்தார்.

இதனையடுத்து ரசிகர்களின் ஆறுதல் வார்த்தைகள் குவிந்து வருகின்றன. இந்த அதிர்ச்சி செய்திக்காக வருந்துகிறேன், விரைவில் குணமடைவேன் என அவர் காணொளி பதிவொன்றையும் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கன்னி டெஸ்ட்டுடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்ட ஒல்லி ரொபின்சன்



கன்னி டெஸ்ட் போட்டியில் விளையாடிய இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளரான 27 வயதுடைய ஒல்லி ரொபின்சன், அனைத்துவிதமான சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபை அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது. சுற்றுலா நியூஸிலாந்து அணியுடன் நேற்று முன்தினம் நிறைவுபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியின்போது டெஸ்ட் அறிமுகம் பெற்றுக்கொண்ட ஒல்லி ரொபின்சன் முதல் போட்டியிலேயே அபாரமான முறையில் 7 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

முதல் போட்டியிலேயே சிறப்பான முறையில் பந்துவீசிய ஒல்லி ரொபின்சனை அனைவரும் பாராட்டிவந்த நிலையில், ஒரு பக்கம் அவர் தொடர்பில் அதிர்ச்சியான தகவல்கள் வெளியாகின. அவர் 8 ஆண்டுகளுக்கு முன்பு - அதாவது 2012, 2013 ஆண்டுகளில் ட்விட்டரில் பதிவிட்ட சில பதிவுகள்தான் அதிர்ச்சியை ஏற்படுத்தின.

குறித்த ட்விட்டர் பதிவுகளில், இனவெறியைத் தூண்டும் விதமாகவும், பாலியல் ரீதியாக சில வார்த்தைகளையும் அவர் பதிவிட்டிருந்தார். இதனை பார்த்த ரசிகர்கள் பலர் இனவெறி பிடித்த ஒல்லி ரொபின்சனை அணியிலிருந்து உடனே நீக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைத்து வந்தனர். ஆனால், ஒல்லி ரொபின்சன் அதற்கு கூறிய விளக்கத்தை ஏற்காத இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபையானது அவரது இந்த ட்விட்டர் பதிவுகள் குறித்து நடவடிக்கை எடுக்க சில ஆய்வுகளையும் மேற்கொண்டது.

அதன்பிரகாரம் ஒல்லி ரொபின்சன் தான் குறித்த ட்வீட்களை பதிவிட்டுள்ளார் என்பது உறுதியாகியுள்ளதால் அவரது மன்னிப்பை நிராகரித்து, இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபையானது அனைத்துவித சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் அவரை இடைநீக்கம் செய்துள்ளது. அவர் 7 மாதங்கள் வரையில் கிரிக்கெட் விளையாட தடைக்குள்ளாவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சமநிலையில் நிறைவடைந்த முதல் டெஸ்ட்
## இரட்டை சதமடித்த கோன்வேக்கு ஆட்டநாயகன் விருது



சுற்றுலா நியூஸிலாந்து அணிக்கும், இங்கிலாந்து அணிக்கும் இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் லோட்ஸ் கிரிக்கெட் மைதானத்தில் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவுக்கு வந்தது. குறித்த டெஸ்ட் போட்டியில் மூன்று வீரர்கள் டெஸ்ட் அறிமுகம் பெற்றனர். நியூஸிலாந்து அணி சார்பாக டிவோன் கோன்வே, இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் பிரேஸி மற்றும் ஒல்லி ரொபின்சன் ஆகியோர் கன்னி டெஸ்ட் போட்டியில் விளையாடினர்.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 378 ஓட்டங்களை குவித்தது. இதில் கன்னி டெஸ்ட் போட்டியில் விளையாடிய டிவோன் கான்வே இரட்டை சதம் அடித்து அசத்தினார். பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 275 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

103 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த நியூஸிலாந்து அணி 6 விக்கெட் இழப்புக்கு 169 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. அதன்படி இங்கிலாந்து அணிக்கு வெற்றி இலக்காக 273 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன.



குறித்த வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, இறுதிநாள் ஆட்டநேர முடிவின்போது 170 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்திருந்த நிலையில் போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவுக்கு வந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக கன்னி டெஸ்ட் போட்டியில் இரட்டை சதம் அடித்த நியூஸிலாந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான டிவோன் கோன்வே தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நாளை மறுதினம் பேர்மிங்ஹாமில் ஆரம்பமாகவுள்ளது.

# பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் 2021
## ரொஜர் ஃபெடரர் விலகல்



டென்னிஸ் உலகில் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து கொண்ட தொடர்களில் ஒன்றான பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் தொடர், பிரான்ஸின் பரிஸ் நகரில் தற்சமயம் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், குறித்த தொடரில் உலகின் 8ஆம் நிலை வீரரான சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ரொஜர் ஃபெடரர் உபாதை காரணமாக தொடரிலிருந்து முழுமையாக விலகுவதாக அறிவித்துள்ளார்.

39 வயதான ரொஜர் ஃபெடரர், கடந்த சில வருடங்களாக உபாதை காரணமாக தொடர்ச்சியாக விளையாட முடியாத நிலையில் இருந்துவருகிறார்.

உபாதை காரணமாக இரண்டு முறை அறுவைசிகிச்சை மேற்கொண்டுள்ள அவர் உடல் நலத்தை கருத்திற்கொண்டு பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் தொடரில் 3 சுற்றுகளில் வெற்றிபெற்று, 4ஆவது சுற்றுக்குத் தகுதிபெற்ற நிலையில் இவ்வாறு தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இந்நிலையில், சமூக வலைத்தளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், என்னுடைய அணியினருடன் மேற்கொண்ட ஆலோசனைக்குப் பின்பு, பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து விலகும் முடிவை நான் இன்று எடுத்துள்ளேன் - என தெரிவித்துள்ளார்.


விளையாட்டு

thamilansports@yahoo.com

# உலகின் இரண்டாவது அதிகவேக பெண்ணான ப்ரேசர் பிரைஸ்




இரண்டு தடவைகள் ஒலிம்பிக் சம்பியனான ஜெமெய்க்கா வீராங்கனை ஷெல்லி-அன் ப்ரேசர் பிரைஸ் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் உலகின் இரண்டாவது அதிவேக பெண் என்ற சாதனையை படைத்துள்ளார்.




அண்மையில் கிங்ஸ்டனில் நடைபெற்ற ஜெமெய்க்காவின் தேசிய திறன்காண் மெய்வல்லுநர் போட்டியில் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தை 10.63 செக்கன்களில் ஓடி முடித்து இவ்வாறு உலகின் இரண்டாவது அதிவேக பெண் என்ற சாதனையை படைத்துள்ளார்.

1988ஆம் ஆண்டு நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் 100 மீற்றர் பெண்களுக்கான ஓட்டப்போட்டியில் அமெரிக்க வீராங்கனை ப்ளொரென்ஸ் ஜொய்னர் க்றிவித் 10.49 செக்கன்களில் ஓடி முடித்து உலக சாதனை படைத்திருந்தார். குறித்த உலக சாதனை 33 வருடங்களாகியும் இதுவரை முறியடிக்கப்படாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.